Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 23, 2022

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 23, 2022 | ஒளி: 08 கதிர்: 171 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free



## 26 ஆம் திகதி விசேட விடுமுறை

எதிர்வரும் திங்கட்கிழமை (26 ஆம் திகதி) விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸ் தினம் வார விடுமுறை தினமான 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ள காரணத்தால், திங்கட்கிழமை (26) விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணத்தை அதிகரித்தால்

# முறைப்பாடின்றி தலையிடுவோம்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

**மக்களை மேலும் ஒடுக்குவதற்கு அரசாங்கத்துக்கு எந்த உரிமையும் இல்லை**

ஶ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், அது தொடர்பில் முறைப்பாடு இன்றி தலையிடத் தயார் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளால் ஏற்கெனவே சுமையாக இருக்கும் மக்களை மேலும் ஒடுக்குவதற்கு அரசாங்கத்துக்கோ அல்லது அதன் பங்குதாரர்களுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைய, ஜனவரி மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிராக ஆணைக்குழு தலையிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



இராணுவப் பாதுகாப்பு வழங்கினால்

## குறைந்த விலையில் விநியோகிக்க முடியும்

இராணுவம், பொலிஸ் திணைக்களத்தின் வாகனங்களை எமக்கு வழங்கினால் பாண், முட்டையை குறைந்த விலைக்கு நாடு முழுவதிலும் விநியோகிக்க முடியுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தில் உள்ள வாகனங்களை எமக்கு வழங்கினால் 49 ரூபாய்க்குப் பாணை பெற்று நாடு முழுவதிலும் அதனை 55 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

‘கிம்புலாஎல குணா’ உட்பட

## 9 பேரையும் அழைத்துவர சீ.ஐ.டி நடவடிக்கை

விடுதலைப் புலிகளை உயிர்ப்பிப்பதற்காக போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறி, இந்திய தேசிய பாதுகாப்பு விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்ட ‘கிம்புலாஎல குணா’ உள்ளிட்ட 9 பேரையும் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் திருச்சியில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் இருந்து கைது செய்யப்பட்டு தமிழ்நாட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அவர்கள் குறித்து விசாரிக்க சீ.ஐ.டி அதிகாரிகள் குழுவினர் அங்கு பயணமாகவுள்ளனர்.

தொடர்ச்சி P2

அரச நிறுவன ஊழியர்களுக்கு

## 25 ஆயிரத்துக்கு மிகாமல் வருடாந்த போனஸ்




அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ் வழங்குவது தொடர்பான இரண்டு சுற்றறிக்கைகளை திறைசேரி வெளியிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்காக வணிக நிறுவனங்கள், சட்டபூர்வ சபைகளுக்கு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் போனஸ் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும் என ஒரு சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நத்தார் நாள்களில் நாடு நனையும்

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நாடு முழுவதும் நகரும் என எதிர்பார்க்கப்படுவதால் டிசெம்பர் 24, 25 ஆகிய தினங்களில், நாடளாவிய ரீதியில் மழை மற்றும் பலத்த காற்று வீசும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## சின்னத் தேர்தல் வர்த்தமானி அடுத்தவாரம் வெளியாகும்

341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்தவார ஆரம்பத்தில் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

ஆட்சியாளர்களாலேயே

## உணவுக்காக இலங்கை கையேந்தும் நிலை



இம்முறை நத்தார் பண்டிகையை ஏழ்மையான மக்களோடு கொண்டாடுவோம் எனத் தெரிவிக்கும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஆட்சியாளர்களின் மோசமான செயற்பாடுகளால் உணவுக்காக இலங்கை கையேந்தும் நிலைமை ஏற்பட்டிருப்பது வெட்கக்கேடானது எனவும் தெரிவித்தார்.

களுத்துறையில் உள்ள தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற நத்தார் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தொடர்ச்சி P2

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள

## வட, கிழக்கு காணிகளை விடுவிக்க இணக்கம்

**தேசிய பாதுகாப்பு சபையில் தீர்மானமாம்**

வடக்கு, கிழக்கில் இராணுவம் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து ஜனவரி 3ஆம் திகதி கூடும் தேசிய பாதுகாப்புச்சபை கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

நுவரெலிய மக்களின் காணிப் பிரச்சினைக்கு

## பெப்ரவரி 04 இற்கு முன்னர் தீர்வு



நுவரெலிய மாவட்டத்தின் காணிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களும் ஒன்றிணைந்து தயாரிக்கும் அறிக்கையை பெப்ரவரி 04 ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு கிடைக்கச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த அறிக்கையை சமர்பிக்கத் தவறினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ஓ.ஐ.சிமார் சிலர் ஓட்டோவில் பயணம் செய்கின்றனர்

பல பொலிஸ் நிலையங்களில் கடமைகளைச் செய்வதற்கு வாகனங்கள் இல்லை என்று தெரிவித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், சில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் (ஓ.ஐ.சி) ஓட்டோவிலேயே பயணம் செய்கின்றனர் என்று தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு 125 வாகனங்கள் கையளிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார். பல பொலிஸ் நிலையங்களில் திருடர்கள் மற்றும் போதைக்கு அடிமையானவர்களை பிடிக்க வாகனங்கள் இல்லை என்று தெரிவித்த அமைச்சர், சில ஓ.ஐ.சிகள் ஓட்டோவிலேயே பயணம் செய்கிறார்கள் என்றும் எனவே நாங்கள் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி கூறுகிறோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டு 7 வருடங்களுக்கும் மேலாக துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களையும் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.


தொடர்ச்சி P2

## ரோஹிங்யா அகதிகள் மிரிஹானைக்கு மாற்றம்

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ரோஹிங்யா அகதிகள், மிரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி நேற்று (22) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 104 ரோஹிங்யா அகதிகள் இரண்டு பஸ்களில் ஏற்றப்பட்டு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மியன்மாரில் இருந்து விரட்டப்பட்ட ரோஹிங்யா இன முஸ்லிகள், பங்களாதேஷ் அகதிமுகாமில் தங்கியிருந்த சமயம், இந்தோனேசியாவுக்கு படகு மூலம் சட்ட விரோதமாக பயணித்தபோதே மருதங்கேணி அருகே நடுக்கடலில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.

தொடர்ச்சி P2



ஜனவரியில்

## ஆறு நிலக்கரி கப்பல்கள் வரும்

நிலக்கரிக்கான தட்டுப்பாடு காரணமாக மின் துண்டிக்கப்படும் நேரம் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்படும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என தெரிவிக்கும் நிலக்கரி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர, ஜனவரி மாதத்தில் ஆறு நிலக்கரி கப்பல்கள் வருகைதரும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை நிலக்கரி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர கூறுகையில், ஜனவரி முதல் வாரத்தில் மற்றுமொரு நிலக்கரி ஏற்றிய கப்பல் நாட்டிற்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனவரியில் ஆறு நிலக்கரி கப்பல்கள் வருமென எதிர்பார்க்கிறோம் என குறிப்பிட்டார். இந்த ஆறு கப்பல்களில் மூன்று கப்பல்களுக்கான கொடுப்பனவுகள் ஏற்கெனவே முடிந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பெப்ரவரி 26 இல் ‘மலையகம் 200’



‘மலையகம் 200’ என்ற தலைப்பில், இலங்கைக்கு வந்த முதலாம் தலைமுறை இந்திய வம்சாவளி தமிழர்களின் வருகையை நினைவுறுத்தும் நிகழ்வை, பெப்ரவரி 26ஆம் நாள் ஞாயிறன்று, தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்தும். இதில் கலந்துக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பல்வேறு கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என, தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூட்டணி தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



சுற்றுலாப் பயணிகளின் வருகை

## அரை இலட்சத்தை தாண்டியது

டிசெம்பர் மாதத்தின் முதல் 20 நாள்களில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் அவர்களில் 49 சதவீதமானவர்கள் ரஷ்யா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இந்த மாதத்தில் மொத்தம் 50,375 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன்,

தொடர்ச்சி P2

## குறை கூறும் அரசியல் இனியும் வேண்டாம்

■ எஸ்.கணேசன், ஆ.ரமேஸ், ரஞ்சித் ராஜபக்ஸ

வெறுமனே குறைகூறும், விமர்சிக்கும் அரசியல் இனியும் வேண்டாம் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்க அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைவோம் என அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

**PAGE 1 தொடர்ச்சிகள்**

## குறைந்த விலையில் விநியோகிக்க முடியும்

இவ்வாறு செய்தால் இடைத் தரகர்களின் மாபியாக்களை இல்லாது ஒழிக்க முடியும். அதுபோலதான் முட்டை உற்பத்தியாளர்களும் தங்களுக்கு உள்ள வாகனங்களிலேயே முட்டைகளை கொழும்புக்குக் கொண்டுவாருங்கள். இடைத் தரகர்களை ஒழிப்போம் எனவும் தெரிவித்தார். இராணுவம் மற்றும் பொலிஸ் திணைக்கள வாகனங்களை எமக்கு வழங்கினால் 55 ரூபாய்க்கும் குறைவான விலைக்கு முட்டைகளை நாம் நாடு முழுவதிலும் விநியோகிக்கத் தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

நாம் ஆதாரங்களுடனயே பேசுகிறோம். நாட்டில் இருந்த பிஸ்கட் மாபியாக்களை நாம் இல்லாது செய்துள்ளோம். அதுபோல 450 ரூபாய்க்கு இருந்த மாவு ஒரு கிலோவின் விலையை 200 ரூபாய்க்குக் கொண்டுவந்தோம். இதனை எதிர்க்கட்சி தலைவரோ, ஜே.வி.பி தலைவர் அநுரகுமாரவோ அல்லது சோசலிஷ முன்னணியனரோ செய்யவில்லை. அதுபோல முட்டை மாபியாவையும் நாம் இல்லாதொழிப்போம் எனவும் தெரிவித்தார்.

## உணவுக்காக இலங்கை கையேந்தும் நிலை

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் கிறிஸ்மஸ் என்ற உடனேயே எதை வாங்குவது என்றே சிந்திக்கிறார்கள். ஆனால் அது முக்கியமல்ல நத்தார் பண்டிகையின்போது வாங்குவதைவிட கொடுப்பதே முக்கியம். நாட்டில் ஏழ்மை அதிகரித்துள்ளது. நாட்டில்

ஒருவேளை உணவுக்கூட இல்லாமல் 6.1 மில்லியன் மக்கள் இலங்கையில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. நாட்டின் ஆட்சியாளர்கள் மோசமானச் செயற்பாடுகளே இதற்குக் காரணம்.

பிச்சைக்காரர்களைப்போல உலக நாடுகளிடமிருந்து சாப்பிடுவதற்கும், குடிப்பதற்கும் பணத்தை கேட்டுக்கொண்டிருக்கிறோம். இது உண்மையில் வெட்கத்துக்குரிய செயல். ஆசிர்வதிக்கப்பட்ட அழகான நாடொன்று இருக்கும்போது நாம் ஏன் பிச்சைக்காரர்களைப்போல கையேந்த வேண்டும். இம்முறை நத்தார் பண்டிகையை ஏழ்மையில் உள்ள மக்களோடு கொண்டாடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## 25 ஆயிரத்துக்கு மிகாமல் வருடாந்த போனஸ்

எனினும், 2021ஆம் நிதியாண்டில் இலாபம் ஈட்டிய போதும் செயற்றிறன் அல்லது வேறு ஏதேனும் ஊக்கத்தொகை அடிப்படையில் எந்த ஊக்கத்தொகையையும் செலுத்தாத நிறுவனங்கள், அதிகபட்சமாக 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை செலுத்தலாம் என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த நிதியாண்டில் இலாபம் ஈட்டி வருகையின் அடிப்படையில் ஊக்கத்தொகையை செலுத்தியிருந்தால் அவற்றின் ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை செலுத்தலாம்.

இதேவேளை, 2021ஆம் நிதியாண்டில் நட்டத்தை பதிவு செய்த நிறுவனங்களுக்கு, நிறுவனத்தின் இலாபத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகளை செலுத்த உரிமை இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, வருகையின் அடிப்படையில் அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் தனியான சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம், அந்தந்த நிறுவனங்களால் மூன்று நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே கொழுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# முறைப்பாடின்றி தலையிடுவோம்

எதிர்வரும் ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணங்கள் நிச்சயமாக திருத்தப்படும் என்றும் மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான தேவையான விபரங்கள் மற்றும் அறிக்கை என்பன ஜனவரி 2 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, புதன்கிழமை (21) உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நத்தார் நாட்களில் நாடு நனையும்

காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து திருகோணமலையில் இருந்து வடகிழக்காக 420 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொள்வதால் குறித்த இரு தினங்களிலும் நாட்டை கடக்க அதிக வாய்ப்புள்ளது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலை நிலவும் என்றும் சில இடங்களில் காற்றுடனான மழை அதிகரிக்கக் கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் இன்றையதினம் (23) மழை பெய்யும் அதேவேளை வடக்கு, கிழக்கு, மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்று திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## வட, கிழக்கு காணிகளை விடுவிக்க இணக்கம்

நேற்று முன்தினம் (21) மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தமிழர் அரசியல் தரப்புடனான பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். இந்த கூட்டத்தில் அரச தரப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டதுடன், தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பலர் விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஏனையவர்களை விடுவிக்கும் விதமாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் உடனடியாக ஐந்து அரசியல் கைதிகளை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களை விடுவிப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் காணி விடுவிப்பு தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடி வருவதாகவும், கணிசமான காணிகளை விடுவிப்பதற்கான இணக்கம் இராணுவத் தரப்பினால் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஜனவரி 3 ஆம் திகதி கூடவிருக்கும் தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இது தொடர்பில் அனுமதி பெறப்பட்டு, தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் தீர்வுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து வரும் 10,11,12,13 ஆம் திகதிகளில் தொடர்ந்து நான்கு நாள்கள் கூடிப் பேசித் தீர்மானங்களை எடுப்பது என்றும் நேற்று முடிவு செய்யப்பட்டது.

## பெப்ரவரி 04 இற்கு முன்னர் தீர்வு

நுவரெலிய மாவட்டச் செயலக அலுவலகத்தில் நேற்று (22) முற்பகல் நடைபெற்ற நுவரெலிய மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் உலக எல்லையை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரை கேபல் கார் வேலைத்திட்மொன்றை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நுவரெலிய மக்களின் காணிப் பிரச்சினைக்கு துரித தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இம்மாவட்டத்திலுள்ள அரசுக்கு சொந்தமான காணி தொடர்பில் மாவட்டச் செயலக அலுவலகம், பெருந்தோட்ட அமைச்சு மற்றும் காணிப் பதிவுத் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் ஒரு மாதக் காலப்பகுதிக்குள் அதனை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து காணிகளுக்குமான அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்து மக்களுக்கு அவசியமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பணிகளை எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். அதுபோன்றே, தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள சுகாதார மத்திய நிலையங்களுக்கு தேவையான வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

நுவரெலிய மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்கள் அவசியம். எனினும் சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் எதையும் இங்கு முன்னெடுக்கக்கூடாது. இலங்கையிலுள்ள மிக உயர்ந்த இடத்திலேயே ஹோட்டன் சமவெளி உள்ளது.எனவே இதற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் ஆகாது. ஹோட்டன் சமவெளியை பாதுகாப்பதற்காக நாம் புதிய சட்டங்களை கொண்டுவர எதிர்பார்க்கின்றோம். அதேபோன்று உலகின் எல்லையை பார்வையிடுவதற்காக பட்டிபொல தொடக்கம் பொரலந்த வரையில் கேபல் கார் சேவையை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்போம் எனவும் தெரிவித்தார்.

## ஓ.ஐ.சிமார் சிலர் ஓட்டோவில் பயணம் செய்கின்றனர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு குறித்த வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் 12 ஆயிரம் வாகனங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை 20 வருடங்கள் பழமையானவை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரோஹிங்யா அகதிகள் மிரிஹானைக்கு மாற்றம்

இவ்வாறு தத்தளித்தவர்கள் 2022 டிசெம்பர் 17ம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு டிசெம்பர் 18ம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதணைகளின் பின்னர் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

சட்டத்துக்கு புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை சட்டத்துக்கு புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று டிசம்பர் 19ம் திகதி மாலை விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன்,104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மீரிகான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்தார் என குற்றச்சாட்டப்பட்ட நபரை 2023 ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். இந்நிலையிலேயே டிசெம்பர் 19ம் திகதி இரவு 8 மணியளவில் தற்காலிகமாக 105 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டு 104 பேரை மிரிஹானவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பெப்ரவரி 26 இல் “மலையகம் 200”

மனோ எம்பி இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கை இந்திய மலையக தமிழர், இலங்கைக்கு வந்த 1823ம் ஆண்டிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பை ஆராய்வு செய்து அங்கீகரிக்க, அமைச்சரவை பத்திரம் மூலம் இலங்கை அரசு அதிகாரபூர்வமாக தீர்மானித்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை இந்திய வம்சாவளி மலையக தமிழர் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, வறுமை, உணவின்மை, காணியுரிமை இன்மை, வீட்டுரிமை இன்மை, கல்வியுரிமை இன்மைஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு, இலங்கை தேசிய தளத்தில் முழுமையான பிரஜைகளாக இல்லாமல், பெருந்தோட்டங்களிலும், தொழில் தேடி மாநகரங்களிலும், வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் பின்தங்கிய குறைவளர்ச்சியை ஆய்வு செய்து அவர்கள் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிபிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகளை அரசாங்கம் எதிர்வரும் 200வது ஆண்டு முதல் முன்னெடுக்க ஆரம்பிக்க வேண்டும் என நாம் அரசாங்கத்தை கோருகிறோம்.

## 9 பேரையும் அழைத்துவர சீ.ஐ.டி நடவடிக்கை

அவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து சட்ட நடவடிக்கை எடுக்கும் நோக்கிலேயே குறித்த குழு பயணிக்கவுள்ளதாக சீ.ஐ.டி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குணசேகரன் எனப்படும் கிம்புலாஎல குணா, புஷ்பராஜா, மொஹமட் அஸ்மின், அழகப்பெரும சுனில் காமினி பொன்சியா, ஸ்டான்லி கென்னடி, லடியா சந்திரசேன, தனுக்க ரொஷான், வெல்ல சுரங்க மற்றும் திலிபன் ஆகியோர் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.


டுபாய், பாகிஸ்தான் மற்றும் ஈரானுக்கு அடிக்கடி பயணம் செய்த பாகிஸ்தானைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரரான ஹாஜி சலீமுடன் கைதான குணசேகரன் மற்றும் புஷ்பராஜா ஆகியோர் தொடர்ந்து தொடர்பில் இருந்ததாக இந்திய தேசிய பாதுகாப்பு விசாரணை பிரிவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சின்னத் தேர்தல் வர்த்தமானி அடுத்தவாரம் வெளியாகும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, சகல மாவட்டங்களிலும் உள்ள அனைத்து பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, இன்று வெள்ளிக்கிழமை (23) கொழும்புக்கு அழைத்துள்ளது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது குறித்து விரிவாக ஆலோசிக்க எதிர்பார்ப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நடத்துவது குறித்த அறிவிப்பு டிசெம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று ஆணைக்குழு தெரிவித்திருந்த நிலையில், திங்கட்கிழமை (26) விடுமுறை என்பதால் செவ்வாய்க்கிழமை (27) அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## ஆறு நிலக்கரி கப்பல்கள் வரும்

சில காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளமை உண்மையே, அதனை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் டிசம்பர் 31ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் நிலக்கரி இருக்காது என கூறப்படும் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானதாகும் எனக் கூறிய அவர், நாட்டுக்கு அடுத்த மாதம் ஆறாம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக நிலக்கரி கிடைக்கும் என்றும் கூறினார்.

## குறை கூறும் அரசியல் இனியும் வேண்டாம்

நுவரெலியா மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடன் நுவரெலியா மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டு மக்கள் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்வது புரிகின்றது. எனினும், தற்போதைய இக்கட்டாய சூழ்நிலையை கடக்க வேண்டும். 2023 ஆம் ஆண்டில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க எதிர்பார்க்கின்றோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் பிரதேசமாகும். அதேபோல அந்திய செலாவணியும் ஈட்டப்படுகின்றது. இப்பிரதேசத்தில் மந்தபோசன பிரச்சினையும் அதிகம் காணப்படுகிறது. அதற்கு தீர்வு காண வேண்டியது அவசியம்.

நாம் தற்போது உணவு நெருக்கடியை எதிர்கொண்டிருந்தாலும் ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தால் அடுத்தவருடம் உலகளவில் உணவு நெருக்கடி ஏற்படலாம். எனவே, எமது உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தொடர வேண்டும். ரஷ்யா - உக்ரைன் பிரச்சினை தீர்ந்தால் அத்திட்டத்தை முடிவுக்கு கொண்டுவரலாம். இல்லையேல் தொடரவேண்டும். பணவீக்கத்தால் மக்கள் கஷ்டத்துக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். 2023 ஜனவரியில் கொப்பிகளை வாங்குவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். நாம் மக்கள் படும் துன்பத்தை மறக்கவில்லை. அடுத்த வரும் நிவாரணங்களை வழங்க எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## அரை இலட்சத்தை...

இந்த ஆண்டு 678,392 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அதிகாரசபை தகவல்கள் தெரிவிக்கின்றன. டிசெம்பர் மாதத்தில், ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், மாலைதீவுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இருந்து 1000 க்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை தந்த மாதமாக இந்த ஆண்டு மார்ச் மாதம் பதிவாகியுள்ளதுடன், அந்த மாதத்தில் 106,500 பேர் வருகை தந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு டிசெம்பரில் 89,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருகை தந்த நிலையில், குளிர்கால மாதங்களில் சுற்றுலாப் பயணிகளை குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வரும் பயணிகளை ஈர்க்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மோசமடைகிறது

பா.நிரோஸ்

நல்லாட்சி அரசாங்கத்தில் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளையே தற்போது ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பின்பற்றி வருவதாகத் தெரிவித்த சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத், இதனால் நாட்டின் பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மோசமான நிலைமையை நோக்கி செல்வதாகவும் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவே முடியாது என தோன்றுகிறது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சிக்கு சென்றதோடு பொருளாதார சரிவும் ஏற்பட்டது. 5.5 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி நாட்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லாத காலத்தில் ரணில் அரசாங்கத்தில் 2.1ஆக வீழ்சியடைந்திருந்தது, 11.5 பில்லியன் பிணைமுறி கடனும் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.



நாட்டின் தற்போதைய கடன்சுமை, பொருளாதார வங்குரோத்து நிலைமைகளுக்கு இதுவும் பிரதான காரணம் எனவும் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்த ரணிலின் பொருளாதார சிந்தனையே தற்போதும் உள்ளது. பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. பொருளாதாரம் தொடர்பில் தெரிந்தவர்களிடம் இந்த விடயத்தைக் கையால இடமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு கடனைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடாக இலங்கையை மாற்ற வேண்டும். மக்கள் ஆணையில்லாத அரசாங்கத்துக்கு எந்தவொரு வெளிநாடுகளும் உதவாது. தேர்தலைக் காலந்தாழ்த்தாது தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



## பாதுகாப்பு அமைச்சிற்கு சீனா நன்கொடை

இலங்கைக்கான சீன தூதரகம், தேசிய மாணவர் படையணியின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் ரூபாவை நன்கொடையாக பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கியுள்ளது. இந்த நன்கொடை பாதுகாப்பு அமைச்சில் வைத்து புதன்கிழமை (டிசம்பர் 21) பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் கொழும்பில் உள்ள சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்ணல் வான் டொங் வழங்கி வைக்கப்பட்டது.


பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க சீன தூதரகம் இந்த நன்கொடையை வழங்கியது. நாட்டிற்கு நல்லொழுக்கமுள்ள இளைஞர்களையும் எதிர்காலத் தலைவர்களையும் உருவாக்கும் நோக்கிலும் தேசிய மாணவர் படையணியின் பயிற்சி நடவடிக்கைளை மேலும் மேம்படுத்தும் நோக்குடனும் இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார மற்றும் சீன பிரதி பாதுகாப்பு இணைப்பாளர்கேர்ணல்காவோ பின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இந்திய பிரதமரினால் அயல் நாடுகளுக்கு பலம்

இந்திய-இலங்கை நட்புறவு சில ஆண்டுகளுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. அது பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டது. எல்லாக் காலங்களிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வலுப்பெற்று வந்திருக்கின்றன என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். இன்று இந்தியா உலகின் சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. இந்தியப் பிரதமராகவும் ஜி20 நாடுகளின் தற்போதைய தலைவராகவும் இருக்கும் நரேந்திர மோடி அவர்களின் கீழ், அயல் நாடுகளுக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன.

உலகின் பலம் வாய்ந்த நாடொன்றின் உயர்ஸ்தானிகர் இந்த நிகழ்வில் பங்கேற்பது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துகிறது. எனவே,



இன்று சீதாவக மக்களுக்கும் விசேடமான நாள். சுற்றாடல் என்பது ஒரு தலைமுறைக்கு மட்டுமானதல்ல. உயிர் பல்வகைத்தன்மை நிறைந்த இத்தகைய தாவரவியல் பூங்காக்களை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும். நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சீதாவக இராசதானி முக்கிய பங்கு வகித்தது. அதற்கு இந்த தனித்துவமான சூழலின் இயற்கையும் காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

புலம்பெயர் தொழிலாளர் தொடர்பில்

## முறையான திட்டத்தை வகுக்குமாறு வேண்டுகோள்

எம்.எல்.எஸ்.டீன்

புலம் பெயர் தொழிலாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் (சுவாட்) தலைவர் வீ. பரமசிங்கம் வேண்டுகோள் விடுத்தார். அம்பாரை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு (சுவாட்) அக்கரைப்பற்றில் நேற்று (22.12.2022) நடாத்திய 'கொவிட் 19ற்கு பிந்திய காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் சமூக நீதி மற்றும் ஊதியத் திருட்டை நிவர்த்தி செய்வது தொடர்பான' ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் புலம் பெயர் தொழிலாளர்கள் அண்மைக்காலமாக மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புலம் பெயர் தொழிலாளர்களின் மூலம் எமது நாடு பாரிய அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்கிறது. இருந்த போதிலும் தொழிலாளர்களின் சேமநலன்களில் முதலாளிமாரும்



முகவர்களும் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை. மாறாக வெளி நாட்டுக்குச் செல்லும் ஆசையை காட்டி வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று ஒப்பந்தத்தில் கூறிய வேலை, சம்பளம், வேலை நேரம், தங்குமிடங்கள் என எவற்றிலும் கவனம் செலுத்துவதில்லை. முதலாளிமார்களினால் கட்டாயப்படுத்தப்படும் வேலைகளுக்கு ஆளாகி பணிபுரிந்து வருகிறார்கள். இதனை முதலாளிமாரிடம் கேட்டும் எந்த பிரயோசனமும் கிடைப்பதில்லை.

தங்களிடம் இருப்பவைகளை இழந்து வெளிநாடுகளுக்கு உழைக்கும் நோக்கில் செல்லும் தொழிலாளர்கள் மாத்திரமன்றி அவர்களது குடும்பங்களும் பாதிப்படைகின்றார்கள். தற்கொலை, சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகின்றனர். சில சமயம் மரணங்களும் ஏற்படுகின்றன. இதற்கு முறையான திட்டங்கள் இல்லை. தொழிலாளி ஒருவர் பாதிக்கப்படும் போது உடனடியாக அவர்களுக்கு நியாயமான முறையில் தீர்வு பெற்றுக் கொடுக்கக் கூடிய திட்டம் இருந்தும் அவை கவனிக்கப்படுவதில்லை. இவ்வாறான பிரச்சினைகள் ஆரம்ப காலம் முதல் இருந்து வந்தாலும் கொவிட் 19 நிலமைகளுக்கு பின்னர் மிகக் கூடுதலாக தலைதூக்கியுள்ளது.

எனவே புலம் பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் இழந்த சம்பளம், உயிர் இழப்புக்கள், உடல் ஊனம் என்பனவற்றிற்கு தகுந்த இழப்பீடுகளும் தற்போதைய காலத்தில் தொழிலாளர்கள் சந்தித்துவரும் பிரச்சினைகளுக்கு அரசாங்கமும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், முகவர் நிறுவனங்களும் ஒன்றித்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என கூறினார். இதன் போது நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் கே.பிரேமலதன் உரையாற்றியதுடன், ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய மதிப்பீட்டு

## கொள்கை தயாரிப்பை துரிதப்படுத்த வேண்டும்

அரசாங்க நிறுவனங்களில் மதிப்பீட்டு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு (கோபா குழு) ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பான விசேட நிகழ்வொன்று கோபா குழு உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. கோபா குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசிம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை மதிப்பீட்டு சங்கத்தின் பிரதிநிதிகள் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். தேசிய மதிப்பீட்டு சட்டமூலத்தின் பூர்வாங்க வேலைகளை நிறைவு செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் மற்றும் இலங்கையின் தேசியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அதன்



பரிந்துரைகளை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற விசேட குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தை நிறுவும் போது மதிப்பீட்டுப் பிரிவை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தேசிய மதிப்பீட்டுக் கொள்கை தயாரிப்பை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

முறையான தேசிய மதிப்பீட்டு செயல்முறையின் அவசியத்தை வலியுறுத்திய கோபா குழுவின் தலைவர், இது ஒரு பூர்வாங்க கலந்துரையாடல் என்றும், எதிர்காலத்தில் இது பற்றி மேலும் விரிவாகக் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.



இலங்கையின் பசுமை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு

## இந்தியாவின் உதவி வழங்கப்படும்

### இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே

இலங்கையின் பசுமை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பொருளாதார ஒத்துழைப்புடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் இந்தியாவின் முழு ஆதரவும் இலங்கைக்கு வழங்கப்படும் என இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே குறிப்பிட்டார்.

இயற்கை வளங்களை சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இந்தியாவின் மகத்தான உறவுகளையும் வரலாற்றையும் நினைவுகூர்வதற்கும், அந்த சிறந்த உறவுகளை வலுப்படுத்திய பிரதமரின் தந்தை அமைச்சர் பிலிப் குணவர்தன போன்றவர்களை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். எமது பொருளாதார கூட்டாண்மையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடும் சூழல் நட்பு கொள்கைகளை உருவாக்க இரு நாடுகளினதும் கூட்டு முயற்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு

## இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தை கையளித்தார் எதிர்க்கட்சி தலைவர்

ஹஸ்பர்

எதிர்க்கட்சி தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "ஐக்கிய மக்கள் சக்தியின் ஹுஸ்மக் (சுவாசம்)" வேலைத்திட்டத்தின் மூலம் வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் வழங்கும் தொடர் பயணத்தின் 55வது நிகழ்வாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் வேண்டுகோளின் பேரில் நேற்று (22) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு ரூபா 39 இலட்சம் பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் (Dialysis Machine) சஜித் பிரேமதாச அவர்களினால் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜகத் விக்ரமசிங்க அவர்களிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கலான கபில கழுபஹன, சரத் லொரென்ஸுஹேவா, திருக்குமார், மாவட்ட முகாமையாளர்கள் ஏ.எஸ். எம். மஹரூப். பிரான்சிஸ் அந்தோணி சேகர், பட்டிணமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர், ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட இளைஞர் அமைப்பாளர் பாத்திஹ் கஸ்ஸாலி, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருடன் வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## தேர்தலை நடத்தும் சூழல் இல்லை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து, நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் பொருளாதார நெருக்கடிகளை கருத்திற் கொண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த வேண்டிய சூழல் தற்போது இல்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி யு.ஆர்.டி சில்வா தெரிவித்திருந்தார்.


ஒரு குழுவினால்



முன்மொழியப்பட்டுள்ள தேர்தல் முறைமை குறித்து பிரதமர் தினேஸ் குணவர்தன பரிசீலித்து, கலந்துரையாடி அதன் குறைபாடுகளை சரி செய்ய வேண்டும் என்பதை தேர்தல்கள் பற்றி பேசும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது என்று கூறும் அவர், அதற்கு விதிவிலக்கான வழிமுறைகள் பின்பற்றப்படலாம் என்றும் வலியுறுத்தியிருந்தார். முறையான தேர்தல் முறைமை அமைக்கப்படும் வரை தேர்தலை ஒத்திவைப்பது சட்டவிரோதமானது அல்ல என யூ.ஆர். டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தூதுவருடன் விசேட கலந்துரையாடல்

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிசுகோஷி ஆகியோருக்கு இடையில் நேற்று (22) நீதியமைச்சில் கலந்துரையாடல் இடம்பெற்றது. நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் நீதித்துறையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் சட்ட அமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.



அரிசியை நியாய விலையில் பெறுவதற்கு

# சீனாவுடன் பேச்சு

ஹஸ்பர்

அடுத்த பருவத்திலும் கடந்த பருவத்திலும் விவசாயிகளுக்கு இலவச அரிசியை வழங்குவதற்கு பதிலாக சந்தை வாரியத்தின் மூலம் கொள்வனவு செய்ய நிதியுதவி வழங்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், சீன அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

சீன தூதுக் குழுவுடனான சந்திப்பொன்று திருமலையில், அண்மையில் இடம் பெற்றபோதே இவ்வாறு கோரியுள்ளார்.

அதன் மூலமாக, நெற் பயிர்களுக்கு நியாயமான விலை விவசாயிகளுக்கு கிடைப்பதுடன் அரிசியை நியாயமான விலையில் நுகர்வோரும் வாங்க முடியுமென சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், இதன் மூலம் அரிசி



கொள்முதல் செய்வதற்கு அரிசி சந்தைப்படுத்தல் சபைக்கு அரசு நிதி ஒதுக்குவதில் உள்ள சிரமம் நீங்கும் என்றும் ஆளுநர் கூறினார்.

சீனாவின் யூஹான் மாகாண மக்கள் சங்கத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சூரிய ஒளி விளக்குகளை அன்பளிப்பாக வழங்கியமைக்கு தனது விசேட நன்றிகளைத் தெரிவித்த ஆளுநர், விவசாய அபிவிருத்திக்கான மேற்படி முன்மொழிவுக்கு ஆதரவளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

விவசாய அமைச்சின் அறிக்கையின்படி எதிர்வரும் பருவத்தில் 609,000 மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குள் விவசாயிகளின் நெற்பயிர்களை சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் அது விவசாயிகளுக்கு மேலும் உதவிகரமாக அமையும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

இதற்கிடையில், மாகாணத்தின் சுத்தமான குடிநீர் தேவைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சீன தூதுக்குழுவிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

வட்டாரங்களின் ஒன்றிணைவை அரசியல் கட்சிகளின் தலைவர்கள்

# கூட்டாக நிராகரிப்பு

மு.தமிழ்ச்செல்வன்

**“ அந்தந்த பிரதேசங்களில் வாழ்கின்ற சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவங்களைத் திட்டமிட்டு தவிர்க்கும் வகையில் வட்டார எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுவதாக பொது அமைப்புகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, எல்லை நிர்ணயங்களின் போது வெளிப்படைத் தன்மையுடனும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் கருத்துகளும் பெறப்படவேண்டும். தனியே அதிகாரிகளால் மட்டும் இவற்றை தீர்மானிக்க விட முடியாது.**

உள்ளூராட்சி வட்டாரங்களை குறைக்கும் வகையில் அவற்றை ஒன்றிணைக்கும் நடவடிக்கையை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக நிராகரித்துள்ளனர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மஹிந்த தேசபிரியவின் தலைமையில் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கட்சித் தலைவர்கள் மேற்படி நடவடிக்கையினை கூட்டாக நிராகரித்துள்ளனர்.

புதிய எல்லை நிர்ணயம் தொடர்பில் தங்களது ஆட்சேபனைகளை தெரிவித்துள்ள கட்சித் தலைவர்கள் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படுகின்ற போது அதில் பல்வேறு குறைபாடுகளும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுகிறது.

பல்லின சமூகங்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்கள் பாதிக்கப்படாத வகையில் அல்லது அவர்களது பிரதிநிதித்துவம் திட்டமிட்டு இல்லாது செய்யும் வகையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அதாவது அந்தந்த பிரதேசங்களில் வாழ்கின்ற சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவம் திட்டமிட்டு தவிர்க்கும் வகையில் வட்டார எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுவதாக பொது அமைப்புகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

எல்லை நிர்ணயங்களின் போது வெளிப்படைத் தன்மையுடனும், அரசியல் கட்சிகளின்பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புகளினதும் கருத்துகளும் பெறப்படவேண்டும் எனவும் தனியே அதிகாரிகளால் மட்டும் இவற்றை தீர்மானிக்க விட முடியாது என்றும் கட்சித் தலைவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.



# நியமனங்கள்

வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணத்துக்கு கலால் திணைக்களத்தின் புதிய ஆணையாளர்களாக ரோட்டரியன் சண்முகம் தங்கராஜா மற்றும் ரோட்டரியன் செல்வராசா ரஞ்சன் ஆகியோர் பதவி உயர்வு பெற்று 01.01.2023 தொடக்கம் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய செல்வராஜா ரஞ்சன் ஊவா மாகாணத்தின் புதிய கலால் உதவி ஆணையாளராகவும், அம்பாறை மாவட்டத்தின் கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா கிழக்கு மாகாணத்தின் புதிய உதவி ஆணையாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்களை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குணசிறி அனுப்பி வைத்துள்ளார்.

# ஒளி விழா நிகழ்வுகள்

ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா நிகழ்வுகள், மாவட்ட செயலகத்தில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் புதன்கிழமை (21) நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து மதங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அந்தந்த மதங்களின் விசேட நிகழ்வுகளை எவ்வித வேறுபாடுமின்றி நிறைவேற்றி வருவதாகவும் இவ்விடயம் சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைவதாகவும் இவ்வொருங்கிணைப்பு நிகழ்வுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் ஏனைய விடயங்களிலும் நிலையானதாக பேணப்படும்போது தேசிய நல்லிணக்கத்தை மேலும் வலுசேர்க்க முடியும் என்று இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நத்தார் செய்தி அருட்தந்தை



நியூமன் அடிகளாரால் முன்வைக்கப்பட்டது. சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இதன்போது அரங்கேறின. கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நத்தார் பரிசில்களும் அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகளால் வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை *Pan Asia bank*, லீட்ஸ் நிறுவனம் மற்றும் வேல்ட் விசன் நிறுவனம் ஆகியன இந்நிகழ்வுக்கான அனுசரனைய வழங்கிருந்தன.

மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், *pan Asia* வங்கி திருகோணமலை கிளை முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகள், விசேட தேவையுடைய சிறுவர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாதகலில் சடலம் மீட்பு

பலாலியிலிருந்து தனியாக ஞாயிற்றுக்கிழமை (19) கடற்றொழிலுக்கு சென்ற இராயப்பு ரொபேட் கெனடி என்பவர் காணமல்போயிருந்த நிலையில், வியாழக்கிழமை சடலமாக, மாதகல் கரையோரத்திலிருந்து வியாழக்கிழமை (22) மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர் தொழிலுக்குச் சென்ற படகு கவிழ்ந்த நிலையில், தேடிச்சென்ற படகினால் கண்டுபிடிக்கப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் கரைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தங்கச் சங்கிலி கொள்ளை

செந்தூரன் பிரதீபன்

கொடிகாமம், குடமியன் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் பணித்த கொள்ளையர்கள் வியாழக்கிழமை (22) அபகரித்து சென்றுள்ளனர்.

முகங்களுக்கு கறுப்பு துணிகளை கட்டிக்கொண்டு, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களே இந்தத் துணிகர கொள்ளையில் ஈடுபட்டிருந்தனர். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கண்காட்சியும் விற்பனையும்

நிதர்ஷன் வினோத்

யாழ். மாவட்ட சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கண்காட்சியும் விற்பனையும் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக வியாழக்கிழமை (22) ஆரம்பமானது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பார்வையிட்டதுடன் பொருட்களையும் கொள்வனவு செய்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பினை விரிவுபடுத்தும் நோக்கிலும் இந்த



விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்றது.

வட மாகாண கூட்டுறவு திணைக்களம் மற்றும் வட மாகாண ஆளுநர் செயலகம் இணைந்து குறித்த கண்காட்சியையும் விற்பனையையும் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிக்கிய சிறுத்தை மீட்பு

கிளிநொச்சி, வேரல் பகுதியில் தோட்டக் காணியில் வைக்கப்பட்ட சுருக்கில் சிறுத்தையொன்று இறுகியுள்ளது

பூநகரி, வேரவில் பகுதியில் புதன்கிழமை (21 ) சிறுத்தை ஒன்று சுருக்கில் மாட்டியுள்ளது. இது தொடர்பில் ஜெயபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# பள்ளிவாயலை பார்வையிடும் நிகழ்வு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் ஓப்பன் மஸ்ஜித் எனப்படும் திட்டத்தின் கீழ் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயலை பார்வையிடும் நிகழ்வு வியாழக்கிழமை (22) இடம் பெற்றது.

கொழும்பு, இஸ்லாமிய கற்கைகளுக்கான ஆய்வு மத்திய நிலையம், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா என்பவற்றின் அனுசரணையுடன் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயல் நிர்வாகம் இந்த ஓப்பன் மஸ்ஜித் நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தது.

இதில், முஸ்லிம் அல்லாத ஏனைய மதங்களைச் சேர்ந்த சகோதரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்கள் கலந்து கொண்டு அல்அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாயலை பார்வையிட்டதுடன் முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளான தொழுகை உட்பட ஏனைய வணக்க வழிபாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் தொழுகையையும் பார்வையிட்டனர்.

இதன் போது முஸ்லிம் பெண்கள் முஸ்லிம் அல்லாத பெண்களுக்கு மருதாணி போட்டதுடன் இஸ்லாமிய கலை,



கலாசாரங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் ஆரம்ப வைபவம் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயல் நிர்வாக சபை தலைவர் கே.எல். எம்.பரீட் தலைமையில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதயசிறீதர், மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் ஏ.குமாரஸ்ரீ, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம். டி.அன்சார் நழீமி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மர்ச செல்வன், காத்தான்குடி உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ். சில்மியா, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம். எஸ்.எம். காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் உட்பட சமய பிரமுகர்கள் இராணுவ உயரதிகாரிகள் அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூக பிரதி நிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புரிந்துணர்வு உடன்படிகை கைச்சாத்து

நூறுல் ஹுதா உமர்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப் பீடத்துக்கும், இலங்கை மது மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்துக்கும் (ADIC) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டது. குறித்த ஒப்பந்தமானது ‘பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மது, புகையிலை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வையும் அறிவையும் ஊட்டி, பிராந்திய, சமூக பிரச்சினைகளை கையாளச் செய்தல்’ எனும் கூட்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம் பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடான நிகழ்ச்சித்திட்டமானது சமூகவியல் துறை மாணவர்களை வலுவூட்டுவதை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது.





# மிதிவெடி மீட்பு

செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி வல்லை அணைக்கட்டு பகுதியில் இருந்து வெடி பொருள் மீட்கப்பட்டதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

பிரதேச மீனவர் ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த வெடி பொருள் வியாழக்கிழமை (22) மீட்கப்பட்டுள்ளது.

# பாதணியை விட்டுச் சென்ற தேக்குமரத் திருடர்கள்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணை காணிக்குள் இருந்த இரண்டு பாரிய தேக்கமரங்கள் இரவோடு இரவாக அறுக்கப்பட்டு குற்றிகளாக்கப்பட்டு திருடப்பட்டுள்ள சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம், செவ்வாய்க்கிழமை (20) இரவு இடம்பெற்றுள்ளதாக விசுவமடு பனை தென்னைவள அபிவிருத்தி நிறுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மிகவும் பெறுமதியான இரண்டு தேக்கு மரங்களும்



கைவாள்கள் கொண்டு வெட்டப்பட்டு சத்தம் கேட்காத வண்ணம் துண்டுகளாக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளன. இவ்வாறு களவாட வந்தவர்கள் தடையப்பொருளாக அவர்களில் பாதணி ஒன்றை ஒன்றினை விட்டு சென்றுள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் கள்ளுத்தவறணை நிர்வாகத்தால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்றம்

பாறுக் ஷிஹான்

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 201ஆவது வருடாந்த கொடியேற்ற விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

டிசெம்பர் 24ஆம் திகதி ஆரம்பமாக உள்ள 201 ஆவது கொடியேற்ற விழாவை இம் முறை சிறப்பாக நடத்துவதற்கு பள்ளிவாசல் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விழா நடைபெறுகின்ற 12 நாள்களும் திண்மக்கழிவகற்றல், மின்னொளியூட்டல், பொது வசதிகள், அலங்கார ஏற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் அனைத்தையும் துரிதமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

05.01.2023 ஆம் திகதி வியாழக்கிழமை லுஹர் தொழுகையின் பின்னர் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கப்பட்டு மாலை 5 மணியளவில் புனித கொடி இறக்கப்படும்.

# கதிரைகள் அன்பளிப்பு

நடராசா கிருஸ்ணகுமார்

கனடாவில் வசிக்கின்ற பழைய மாணவன் க.பத்மநாதன் நிதிப் பங்களிப்பில் முல்லைத்தீவு, குமுழமுனை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வேண்டுதலுக்கு இணங்க குமுழமுனை மகாவித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்திற்கு 10 கதிரைகள் குமுழமுனை மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களிடம் புதன்கிழமை (21) கையளிக்கப்பட்டன.

கதிரைகளின் பெறுமதியானது 230,000 ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் காணப்படுகின்ற தளபாட பற்றாக்குறைக்கு மத்தியில்



இப்பத்து கதிரைகள் கிடைத்தமை முக்கியமான விடயமாகுமென பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரியாவிலிருந்து

# ரூ.10ஆயிரம் கோடி மருந்துகள் கிடைக்கும்

எட்டப்படாத மக்களுக்கான சர்வதேச பணியகத்தின் பூரண அனுசரணையில் கொரியாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட் டுள்ள 43 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

பணியகத்தின் இலங்கைக்கான அமைப்பாளர் போதகர் பிரான்சிஸ் மற்றும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக. 43 கோடி ரூபாய் பெருமதியான மருந்து பொருட்கள் மற்றும் நவீன மருத்துவ சாதனங்கள் இலங்கைக்குக் கிடைத்துள்ளன.

அத்தியாவசிய மருந்துகளின் கட்டுப்பாட்டின் விளைவாக,



முறையான சிகிச்சை இன்றி மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் கொரிய நாட்டில் இருந்து இந்த மருந்துவப் பொருட்கள் மற்றும் நவீன மருத்துவ சாதனங்கள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த மருந்துப்பொருட்களை பெருந்தோட்ட மலையக பகுதிகளுக்கும் நாட்டில் மருத்துவ தேவைப்பாடு நிலவும் வைத்தியசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்க எண்ணியுள்ளோம்..

இந்நிறுவனம் எதிர்காலத்தில் சில மருந்து பொருட்களையும் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களையும் நன்கொடையாக வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

எதிர்காலத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் கிடைக்கும் என்றும் வடிவேல் சுரேஷ் எம்.பி நம்பிக்கை தெரிவித்தார்.

# கிளாஸ்கோவின் முதலாவது பட்டதாரியான புண்ணியசெல்வத்துக்கு பெரும் வரவேற்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

நானுஓயா- கிளாஸ்கோ தோட்டத்தில் முதல் பட்டதாரி என பெருமையைப் பெற்றுள்ள இளைஞனை, அத்தோட்ட மக்கள் அனைவரும் திரண்டு வரவேற்பளித்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளையான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் மற்றும் சமூககல்வியில் பட்டம் பெற்றுள்ளார்.

25 வயதான நாராயணன் புண்ணியசெல்வம் தனது



ஆரம்பக்கல்வியை கிளாஸ்கோ தமிழ் வித்தியாலயத்திலும் உயர்தரத்தை நானுஓயா தமிழ் வித்தியாலயத்திலும் கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவிலும் கற்று பட்டம் பெற்றுள்ளார்.

குடும்பத்தில் மூத்த பிள்ளையான இவரின் தந்தை நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர் என்பதுடன், தாயின் உழைப்பில் மாத்திரமே முழு குடும்பமும் தங்கியுள்ளது.

600 குடும்பங்கள் வசிக்கும் கிளாஸ்கோ தோட்டத்தில் முதல் பட்டதாரியான குறித்த மாணவன், தோட்ட மக்களால் அமோகமாக வரவேற்கப்பட்டுள்ளார்.

## சிவனைத் தரிசிக்க போதையில் காரோட்டிய யுவதிக்கு அபராதம்

ரஞ்சித் ராஜபக்ஷ

மதுபோதையில் காரை செலுத்தியவாறு, சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற யுவதி ஒருவர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, யுவதியிடம் 25,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவரது சாரதி அனுமதிப்பத்திரமும் 3 மாதங்களுக்கு இரத்து செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நல்லத்தண்ணி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், ஹட்டன் நீதிவான் பருக்டீன் முன்னிலையில் புதன்கிழமை (21) ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதான யுவதிக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அந்த காரில் பயணித்த மேலும் இரண்டு இளைஞர்களும் போதையில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.





## நுவரெலியாவில் ஜனாதிபதி

நுவரெலியாவுக்கு வியாழக்கிழமை (22) காலை விஜயம் செய்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், எம்.பிக்களான எம். ராமேஸ்வரன், சி.பீ.ரத்னாயக்க உள்ளிட்டவர்கள் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர். (ஆ.ரமேஸ்)

## ரயில் பயணத்தை தாமதமாக்கிய சடலம்

ஷேன் செனவிரத்ன

ரயிலில் மோதி உயிரிழந்த நபரின் ஒருவரின் சடலம் தண்டவாளத்தில் இருந்து அப்புறப்படுத்த தாமதமாகியதன் காரணமாக, மலையக ரயில் சேவைகள் இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகின.

வியாழக்கிழமை (22) காலை பிலிமத்தலாவை ரயில் நிலையத்துக்கு அருகிலேயே குறித்த சடலம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வியாழக்கிழமை (22) காலை 6.30 மணியளவில் இந்த நபர் ரயிலில் மோதி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், காலை 9 மணிவரை இச்சடலம் ரயில் தண்டவாளத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பின்னர் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்த பேராதனைப் பொலிஸார், சடலத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீயால் வீடுகளை இழந்தோர் நிர்க்கதி

எஸ்.கணேசன்

இராகலை 2ஆம் பிரிவு தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகளில் அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த தோட்டத்தில் உள்ள லயக்குடியிருப்பில் 2021ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 14 வீடுகளைக் கொண்ட லயமானது, முற்றாக எரிந்து தீக்கிரையானது.

இதனால் 14 குடும்பங்களை சேர்ந்த 60க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகினர். மேலும், இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக கூடாரங்களில் எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில்,தொடர்ந்தும் ஒன்றரை வருடங்களாக குறித்த கூடாரங்களில் பல்வேறு அசௌகரிங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான புதிய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லானது, 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டப்பட்டு பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வீடமைப்பு பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும்



தற்போது அதன் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவர்கள் வாழும் தற்காலிக கூடாரங்களில் குடிநீர், மின்சாரம், மலசலக்கூடம் ஆகியன முறையாக இல்லாத காரணத்தால் தினந்தோறும் இவர்கள் பல்வேறுப்பட்ட அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள வீடுகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதிகள் காடாக காட்சியளிக்கின்றன. அத்தோடு, கட்டுப்பட்டுள்ள வீடுகளில் உள்ள சுவர்கள் வெடிப்புற்று காணப்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் தமக்கான நிரந்தர வீடுகளும் இல்லாமல், தற்காலிக வசிப்பிடத்தில் அடிப்படை வசதிகளும் இல்லாமலும் சொல்லன்னா துயரங்களுக்கு மத்தியில் வாழும் எமக்கு விடிவை உடனடியாத் தரவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

போஷாக்கு பால்மாவுக்கு எதிர்ப்பு

# சென்ஜோன் டிலரியில் ஆர்ப்பாட்டம்

எஸ். சதீஸ்

நோர்வூட்- சென்ஜோன் டிலரி கீழ் பிரிவு சிறுவர் பாராமரிப்பு நிலையத்தின் பெற்றோர்கள் புதன்கிழமை (21) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருத்தனர்.

நோர்வூட் சமுர்த்தி வங்கியினால் பெருந்தோட்ட சிறுவர்களுக்கான போஷாக்கு பால்மா 21 ஆம் திகதியன்று வழங்கப்படுமென அறிவித்து 100க்கும் மேற்பட்டவர்களின் பெயர்கள் பதியப்பட்ட போதிலும் இறுதியில் 10பேருக்கு மாத்திரம் போஷாக்கு பால்மா வழங்கப்பட்டதாகத் தெரிவித்து,



இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

“அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பால்மா சமுர்த்தி வங்கியினால் கொள்ளை” ,“பால்மாவுக்கு மோசடி செய்யாதே” போன்ற கோஷங்களோடு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டகாரர்கள் கோரிக்கை விடுத்தனர்.







## கௌரவிப்பு

புஸ்ஸல்லாவை இந்து தேசிய கல்லூரியின் மாணவர் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா, கல்லூரி முதல்வர் எஸ். சந்திரமோகன் தலைமையில், கல்லூரி பிரதான மண்டபத்தில் புதன்கிழமை(21) நடைபெற்றது. (எஸ்.கணேசன்)

மலையகத்திலிருந்து போதைப்பொருள்

## முற்றாக ஒழிக்கப்படும்

நீலமேகம் பிரசாந்த்



போதைப்பொருள் பாவனை முழுநாட்டிலும் ஒரு வைரஸ்போல பரவி வருகின்றது.குறிப்பாக மலையகத்திலும் இதன் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, போதைப்பொருள் பாவனையிலிருந்து மலையகத்தை மீட்டெடுக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், தற்போது மலையகத்தில் குறிப்பாக ஐஸ் போன்ற போதைப்பொருட்கள் ஒருசிலரின் ஊடாக மலையகத்துக்குள் குறிப்பாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விநியோகிக்கப்படுகின்றது.இவற்றை இல்லாதொழிக்க பொதுக்கள் அனைவரும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருட்களுடன் எவரும் நடமாடினாலோ அல்லது சந்தேகத்திற்கிடமான முறையில் எவரும் காணப்பட்டாலோ அவர் தொடர்பில் சற்று அவதானத்துடன் இருக்க வேண்டும். மேலும் பிள்ளைகளின் நடத்தைகள்,பழகும் நண்பர்கள் தொடர்பில் பெற்றோர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றார்.

அரசாங்கம் அதை தடுப்பதற்கு பல செசெயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எனவே நாமும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மஸ்கெலியா பிரதேச சபையின்

# த. மு.கூ. உறுப்பினர் தனித்து இயங்க முடிவு

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பிரதேசசபையின் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினராக செயற்படும் பிரவுன்ஸ்வீக் வட்டார உறுப்பினர் சிவம் சுப்ரமணியம் நேற்று முதல், சுயாதீனமாக இயங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

2018ஆம் ஆண்டு தொடக்கம் மஸ்கெலியா பிரதேச சபையின் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மூலம் உறுப்பினராக பதவி பிரமாணம் செய்த தான், தொடர்ந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஆகையால் சுயாதீனமாக இயங்க முடிவு செய்து, தான் அங்கம் வகித்த தொழிலாளர் தேசிய சங்கத்தில் இருந்து விலகுவது தொடர்பில், கட்சி உயர் பீடங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

டிக்கோயா நுண்கலை கல்லூரியில்

## ஒளிவிழா



செ.தி.பெருமாள்

“மீட்பரின் துணையால் பொருள் ஆதாரம் பெற்று மீழுவோம்’ எனும் தொனிப்பொருளில் டிக்கோயா- நுண்கலைக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு பாடசாலையின் அதிபர் மூ.மூவேந்தன் தலைமையில் சர்வமத பங்களிப்புடன் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் வாழ்த்து மடல், கொட்டில் அமைத்தல்,மனைப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான “அன்பியம்” என்ற நூல் நாக்காவது தடைவையாகவும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது கொடகே புத்தகசாலையின் தேசிய விருது பெற்ற டிக்கோயா தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் சிவனு மனோகரனுக்கு பாடசாலை சமூகத்தால் பொன்னாடை அனுவித்து கௌரவிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஹட்டன் திருச்சிலுவை ஆலயத்தின் பங்கு தந்தை நிவ்மன் பீரிஸ்,பௌத்த,இஸ்லாம் மதத்தலைவர்கள் உட்பட ஹட்டன் வலயக்கல்விப்பணிமனையின் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தயாரத்னவின் தங்க மனது



சுமணசிறி குணதிலக

கண்டெடுக்கப்பட்ட ஏழரை இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கப் பொதியை பொலிஸாரிடம் கையளித்த சம்பவமானது, மொனராகலை நகரில் பதிவாகியுள்ளது.

மொனராகல- கல்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த கே.எம்.லக்மால் தயாரத்ன என்பவர், மொனராகலை சந்தைப் பகுதிக்கு அருகில் நான்கரை பவுண் நிறையுடைய, ஏழரை இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு தங்க சங்கிலி, மோதிரம் மற்றும் பதக்கங்கள் அடங்கிய பொதியை ஒன்றைக் கண்டெடுத்துள்ளார்.

இதனையடுத்து, மொனராகல பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தான் கண்டெடுத்த நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்து, பொலிஸாரிடம் கையளித்துள்ளார்.

# முடிச்சுமாறிகள், ஏமாற்றுப் பேர்வழிகளிடம் கவனம்

பல வருடங்களுக்குப் பின்னர், நீண்ட விடுமுறையுடன் நத்தார் பெருநாளை கொண்டாடி, புத்தாண்டை வரவேற்க பலரும் காத்திருக்கின்றனர். நத்தாரைப் பொறுத்தவரையில் பெரும் நகரங்கள், மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு, வண்ணமயமாக ஒளியூட்டப்பட்டுள்ளன.

கிறிஸ்மஸ் அலங்காரங்களுக்கான பொருட்கள், மாட்டுத்தொழுவ கொட்டில்கள் என்பவற்றை விற்பனை செய்வோர், இம்முறையும் எதிர்பார்த்த அளவு விற்பனையாகவில்லை எனப் புலம்புகின்றனர்.

பொதுவாகப் பார்க்கையில், கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கான விற்பனைகள் எதிர்பார்த்த அளவில் சூடுபிடிக்கவில்லை. குடும்பத்தில் சிறியவர்களுக்குத் தேவையான ஆடைகளை ஒருசிலர் கொள்வனவு செய்துகொண்டுள்ளனர். இருப்பவர்கள் குடும்பத்துகே செலவழித்துள்ளனர் என்பது மட்டுமே உண்மையாகும்.

கொரோனாவும் அதற்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியாலும் வீடுகளுக்குள்ளேயே அடைப்பட்டுக் கிடந்த தங்களுடைய பிள்ளைகளின் மனங்களில் மாற்றங்களையும் புதுத்தெம்பையும் ஊட்டும் வகையில், நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பல பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சகிதம் உள்ளூர் சுற்றுலாக்களில் பங்கேற்றுள்ளனர்.

பொதுமக்களுக்கான பாதுகாப்பு பெரும் நகரங்களில் பலமடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி, அப்பாவி உயிர்களுக்கு உலைவைத்துவிடாது, வாகன சாரதிகள் நடந்துகொள்ள வேண்டும்.

பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருந்தாலும், கடந்த காலங்களில் பல கொள்ளைச் சம்பவங்கள் பட்டப்பகலிலேயே இடம்பெற்றன. ஆகையால், ஆபரணங்களை அணிந்து கொண்டு, மற்றையவர்களின் கண்களுக்குப் பகட்டுக் காட்டாமல், சுற்றுலாக்களில் சாதாரணமாகப் பங்கேற்பதே சாலச்சிறந்ததாகும்.

வீடுகளுக்குள்ளே பல நாள்களாக முடங்கிக்கிடந்தவர்கள், வழிபாடுகளுக்காக தேவாலயம், கோவில்களுக்குச் செல்வர்; இன்னும் சிலர் சுற்றுலாச் செல்வர். ஆகையால், நத்தார் கொண்டாட்டமும் புத்தாண்டும் ஓரளவுக்கு களைகட்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சனநெரிசலைப் பயன்படுத்தி, முடிச்சுமாறிகள் தங்களுடைய கைவரிசையைக் காண்பிக்கக்கூடும். இல்லாத காலத்தில், இருப்பதையும் இழந்து, நடுவீதியில் நிற்பதை விடவும், இருக்கும் பணம், நகை உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

அதேபோல, குறுந்தூரங்களுக்கு சேவையில் ஈடுபடும், ஓட்டோ உள்ளிட்ட வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்களின் சாரதிகளும், சாதாரண கட்டணங்களை அறவிடவேண்டும். 'சுற்றிக்காட்டுகின்றேன்' என்னும் பெயரில், சுற்றிவிட்டு, உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் கறந்துவிடக்கூடாது.

இவற்றுக்கு மத்தியில், ஹோட்டல்கள், உணவகங்களில் வழங்கப்படும் உணவின் தரம் தொடர்பில், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஆகக்கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டும். இல்லையேல், சுற்றுலா வந்துவிட்டு, மலசலகூடங்களையே தேடித்திரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஆகையால், பெருநகரங்களுக்குப் படையெடுப்போர் விழிப்பாகவும் கவனமாகவும் பயணம் செய்யவேண்டும். முடிச்சுமாறிகள், ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பில் எந்நேரமும் அவதானமாக இருக்கவேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## வலது தீவிரவாதத்தின் நிழலில் – 07:

# ஜேர்மன் அதிவலதின் கதை: ஒரு பின்கதைச் சுருக்கம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜேர்மனியில் ஆட்சிக்கவிழ்ப்புக்கு முயன்ற அதிவலது-நாஜிகள் கைது செய்யப்பட்ட நிகழ்வு அதிவலது தீவிரவாதத்தின் ஆபத்தை ஜேர்மனிக்கு மட்டுமன்றி முழு ஐரோப்பாவிற்கும் காட்டி நின்றது. ஹிட்லரின் காலத்தில் தீவிர அதிவலதின் வடிவமாக, நாஜிசத்தின் தலைமையகமாக, கோட்பாட்டின் கலங்கரை விளக்கமாக ஜேர்மனி இருந்தது. இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் தோல்வி அதற்கு முடிவு கட்டியது. இரண்டாம் உலகப்போரையடுத்து நாசிசக் கோட்பாட்டை ஜேர்மனி தடைசெய்தது. அது மனிதாபிமானமற்றது என்பதை ஜேர்மனியர்கள் படிப்படியாக ஏற்றுக் கொண்டார்கள். இந்தப் பின்புலத்தில் இன்றைய நிலையில் செல்வாக்குள்ளதாக அதிவலது எவ்வாறு மாறியது? அதிவலது தீவிரவாதத்தின் மோசமான விளைவுகளை வேறெவரையும் விட நன்கறிந்தவர்கள் ஜேர்மனியர்கள். அவ்வாறு இருந்தபோதும் இன்று அதே சிந்தாந்தம் எவ்வாறு கணிசமான செல்வாக்கைப் பெற்றுள்ளது? இது ஆராயப்பட வேண்டியது. இதற்கான வரலாற்றுக் காரணங்களை தேடுவது பயனுள்ளது.

கடந்தவாரக் கட்டுரையில் நாஜிகளுக்கும் அமெரிக்கப் புலனாய்வுக்குமான நெருக்கமான உறவும் ஐரோப்பாவில் கம்யூனிச அபாயத்தை எதிர்கொள்ள நாஜிகள் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும் சுருக்கமாகப் பார்த்தோம். இன்று அதை விரிவாக நோக்கலாம். இரண்டாம் உலகப்போரின் முடிவின் பின்னர் நாஜிப் போர்க்குற்றவாளிகளை அமெரிக்கா பாதுகாத்தது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக வைக்கப்பட்ட ஒன்று. ஆனால் அதை சோவியத் ஒன்றியத்தின் பிரசாரம் என்றும் கம்யூனிச சதி என்றும் மேற்குலக ஊடகங்கள் எழுதி வந்தன. ஆனால் காலப்போக்கில் இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்கா முன்னெடுத்த Operation Paperclip பற்றிய தகவல்கள் வெளியாகத் தொடங்கியதில் இருந்து நாஜிகளுக்கும் அமெரிக்க உளவுத்துறைக்குமான உறவு முதன்முறையாக வெளிச்சத்துக்கு வந்தது.

jOperation Paperclip என்பது, நாஜி விஞ்ஞானிகளை அமெரிக்க உளவுத்துறை எவ்வாறு அமெரிக்காவுக்கு கடத்திவரும் நடவடிக்கையாகும்.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், 1944ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில், அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் 'ஒபரேஷன் பேப்பர்கிளிப்' என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட ஒரு இரகசிய பணியைத் தொடங்கின. உயிரியல் மற்றும் இரசாயனப் பொருட்கள் உட்பட ஜெர்மன் ஆயுதங்களைக் கண்டுபிடித்து பாதுகாப்பதே இதன் நோக்கமாக இருந்தது. ஆனால் அமெரிக்க அறிவியல் புலனாய்வு அதிகாரிகள் ஆயுதங்கள் மட்டும் போதுமானதாக இல்லை என்பதை விரைவாக உணர்ந்தனர். நாஜி விஞ்ஞானிகளையே அமெரிக்காவிற்கு அழைத்து வர வேண்டும் என்று அமெரிக்கா தீர்மானித்தது. இதன்கீழ் ஹிட்லரின் கீழ் பணியாற்றிய 1,600 விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களது குற்றங்கள் - பெரும்பாலானவை மனிதகுலத்திற்கு எதிரானவை - மன்னிக்கப்பட்டன. அமெரிக்காவிற்கு கொண்டு வந்த விஞ்ஞானிகளின் கடந்த காலத்தை மறைக்க அமெரிக்க அரசாங்கம் மிகுந்த முயற்சி எடுத்தது. இவர்களில் மனிதனை நிலவுக்கு அழைத்துச் சென்ற ரொக்கெட்டுகளை வடிவமைத்த வெர்ன்ஹர் வான் பிரவுன், நாசாவின் தலைவராக வந்த கேர்ட் டிபொஸ் எனப் பலர் அடங்குகின்றனர்.

யூதர்களுக்கு எதிராக அதிபாதகங்களைச் நடைமுறைப்படுத்திய நாஜி வைத்தியரான பென்சிங்கர் இவ்வாறு அமெரிக்காவுக்கு அழைத்துவரப்பட்டோரில் ஒருவர். அவரது குற்றங்கள் மனிதகுலத்திற்கு எதிரானவை. அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இறந்தபோது அவருக்கான பெருமைமிகு அஞ்சலியை 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை எழுதியது. அவரது குற்றங்களும் கடந்தகாலமும் மறைக்கப்பட்டு ear thermometer யைக் கண்டுபிடித்து மனிதகுலத்திற்கு மாபெரும் பணியாற்றினார் என்று புகழ்பாடியது.

ஒபரேஷன் பேப்பர்கிளிப் பற்றித் தெரிந்துகொள்ள அனீ ஜேக்கப்சன் எழுதிய *Operation Paperclip: The Secret Intelligence Program That Brought Nazi Scientists To Americav* என்ற நூலை வாசிக்கலாம்.

இதற்கு மேலாக இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல நாஜி போர்க் குற்றவாளிகளை அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் எவ்வாறு பாதுகாத்தனர் என்பது பற்றிய புதிய விவரங்களை ஓர் அறிக்கை வெளிப்படுத்துகிறது. இவ்வறிக்கை கெடுபிடிப்போரை எதிர்கொண்டதால், 1946 ஆம் ஆண்டிலேயே நாஜி குற்றவாளிகளை தண்டிப்பதில் அமெரிக்கா ஆர்வம் காட்டவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

நாஜிகளின் போர்க்குற்றங்களை வெளிப்படுத்துவதற்கான சட்டமூலம் மிக நீண்ட போராட்டத்திற்குப் பிறகு அமெரிக்காவில் சிலகாலம் முன்பு நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்தே குறித்த விடயங்கள் பொதுவெளிக்கு வந்தன. 'ஹிட்லரின் நிழல்: நாஜி போர்க் குற்றவாளிகள், அமெரிக்க உளவுத்துறை மற்றும் கெடுபிடிப்போர்' (Hitler's Shadow: Nazi War Criminals, US Intelligence and the Cold War) என்று தலைப்பிடப்பட்ட அறிக்கையானது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நேச நாட்டு உளவுத்துறை அதிகாரிகள் முன்னாள் நாஜிக்கள் மற்றும் போர்க் குற்றவாளிகள் பயனுள்ளவர்களாகவும் ஒத்துழைப்பவர்களாகவும் இருந்தால் அவர்களைப் பாதுகாத்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

'சந்தேகத்திற்கு இடமின்றி, கெடுபிடிப்போரின் ஆரம்பம் அமெரிக்க உளவுத்துறை அமைப்புகளுக்கு புதிய செயல்பாடுகள், புதிய முன்னுரிமைகள் மற்றும் புதிய எதிரிகளை வழங்கியது. ஜேர்மனியர்கள் அல்லது ஜேர்மன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதோ தண்டிப்பதோ முக்கியமானதல்ல. மாறாக சில சமயங்களில், அவ்வாறு செய்வது எதிர்விளைவுகளைத் தோற்றுவிக்கும் போலவிருந்தது' என்று அறிக்கை குறிப்பிடுகின்றது.

இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகின்ற எண்ணற்ற உதாரணங்களில் ஒன்றை மட்டும் நோக்கலாம். ருடால்ஃப் மில்ட்னர், நாஜி அதிகாரியாகப் பணியாற்றியவர். இன்றும் யூதர்களின் மீதான கொடும்பாதகத்தின் சாட்சியாகக் கொள்ளப்படுகின்ற ஆஷ்விட்ஸ் சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர். இதை அமெரிக்கா நன்கு அறிந்திருந்தது. போருக்குப் பின்னர் வியன்னாவில் வைத்து விசாரிக்கப்பட்டபோது, அமெரிக்க அதிகாரிகள் அவரை 'மிகவும் நம்பகமானவர் மற்றும் ஒத்துழைப்பவர்' என்று நற்சான்றிதழ் கொடுத்தனர் என்று சொல்லும் அறிக்கை, ஆஷ்விட்ஸில் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட மில்ட்னர், 'ஒழுங்கைப் பாதுகாக்க மற்றும் நாசவேலைகளைத் தடுக்க, போலந்து மற்றும் சிலேசியாவில் உள்ள ஜேர்மனியர்கள் அதைச் செய்ய வேண்டும்' என்று கூறி, தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்றதாகக் கூறுகிறது. இவ்வறிக்கை அமெரிக்க உளவுத்துறை அவர் நியூரேம்பேர்க் தீர்ப்பாயத்தில் இருந்து தப்பி தென்னமெரிக்கா செல்வதற்கு உதவியது என்று கூறுகிறது. இவ்வாறு பலரை அமெரிக்கா பாதுகாப்பாகத் தப்புவதற்கு உதவியது என்பது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அதேபோலவே பல நாஜிகள் அமெரிக்க உளவுத்துறையால் மன்னிக்கப்பட்டு ஜேர்மனியில் இயங்க அனுமதிக்கப்பட்டார்கள். வெளித்தோற்றத்திற்கு 'நாசிச சிந்தனைகளுக்கு தடை' இருந்தபோது நடைமுறையில் அது இருக்கவில்லை. மாறாக கம்யூனிச அபாயத்திற்கு/ எதிரான நல்ல கூட்டாளிகளாக நாஜிகள் கருதப்பட்டார்கள். எனவே அச்சித்தாந்தம் உயிர்ப்புடன் இருக்கவும் இயங்கவும் அமைப்பாகவும் அனுமதிக்கப்பட்டது.

1945க்குப் பிறகு சோவியத் கூட்டமைப்பு மேற்குலகின் பொது எதிரியாக இருந்ததால், கெடுபிடிப்போரின் புதிய முனைகளில் அவர்களின் திறமைகள் பயனுள்ளதாக இருந்தால், முன்னாள் நாஜிக்கள் நீதியிலிருந்து தப்பிக்க முடியும் என்பதை நேச நாட்டு அதிகாரிகள் பரவலாக ஏற்றுக்கொண்டதாக பல வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர்.

அதேபோல 2010ஆம் ஆண்டு ஜேர்மனியின் ஸ்டாசி ஆவணக்காப்பகத்தின் அதிகாரிகள் மேற்கு ஜேர்மனியின் இரகசிய சேவை முன்னாள் நாஜிக் குற்றவாளிகளை பணியமர்த்துவதைக் காட்டும் சில தகவல்களை வெளியிட ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் சில முக்கிய தகவல்கள் இன்னமும் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட தகவல்கள், மேற்கு ஜேர்மன் உளவுத்துறை எவ்வாறு முன்னாள் நாஜிக்கள் மற்றும் போர்க் குற்றவாளிகளைப் பயன்படுத்தியது என்பதைக் காட்டுகிறது. ஜேர்மன் உளவுத்துறையின் கடந்த காலத்தைப் பற்றிய முக்கியமான தகவல்கள் ஸ்டாசி கோப்புகளில் நீண்ட காலமாக மறைக்கப்பட்டுள்ளன. முன்னாள் கம்யூனிஸ்ட் கிழக்கு ஜெர்மனியின் இரகசியப் பொலிஸாரான ஸ்டாசியால் உன்னிப்பாகச் சேகரிக்கப்பட்ட ஏராளமான தகவல்களைக் கொண்ட தகவல்களின் பரந்த காப்பகமே இப்போது ஸ்டாசி ஆவணக் காப்பகமாகும்.

வெளியாகியிருப்பவை, ஜேர்மனியின் மிக மோசமான இரகசியங்களில் ஒன்றாகும். ஆயினும்கூட, மேற்கு ஜேர்மனியின் பொலிஸ், இரகசிய சேவை மற்றும் அரசியலில் முன்னாள் நாஜிக்கள் மற்றும் போர்க்குற்றவாளிகள் இருப்பதை இன்னும் கேள்விகள் சூழ்ந்துள்ளன. அந்த மக்கள் யார், அவர்கள் நாஜி ஜெர்மனியிலும் பின்னர் போருக்குப் பிந்தைய மேற்கு ஜெர்மனியிலும் என்ன பதவிகளை வகித்தனர்? இவை இன்னமும் பதில் தெரியா வினாக்கள். ஆனால் இவை ஜேர்மனியில் நாசிசம் எவ்வாறு தப்பிப்பிழைத்தது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

## கடிதங்கள்

### நெல் வயல்களை அழிக்கும் யானைகள்

அம்பாறை மாவட்டத்தில் நெல் வயல்களை, காட்டு யானைகள் தேசப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய எல்லைப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கையை, மாலை வேளையில் வரும் யானைக் கூட்டம், அறுவடை செய்யவுள்ள நெல் வயல்களை தேசப்படுத்தி வருகிறது.

அத்துடன், ஒலுவில், அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பிந்தங்கிய பிரதேசங்களிலும் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுவதால், எல்லைக்கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக, மாலை நேரங்களில் தங்கள் குழந்தைகளுடன் குடியிருப்பை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று, காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் இந்த நிலைமையால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் புகும் யானைகள் கூட்டம், வீட்டுத் தோட்டங்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம். ஹனீபா



## சிங்கள விளையாட்டு கழகத்துடன்

# SLT-MOBITEL உடன்படிக்கை கைச்சாத்து

SLT-MOBITEL, சிங்கள விளையாட்டுக் கழகத்துடன் (SSC) ஐந்தாண்டு கால பிரத்தியேக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளது. நாட்டில் காணப்படும் முன்னணி விளையாட்டுக் கழகங்களில் ஒன்றாக SSC திகழ்கின்றது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், SSC இன் முழுத் தொடர்பாடல் வலையமைப்பும், ஃபைபர் கட்டமைப்புக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதனூடாக அதிவேக குரல், இணைய மற்றும் PEOTV சேவைகள் கழகத்துக்கும் அதனைப் பயன்படுத்துவோருக்கும் வழங்கப்படும்.

இந்த உடன்படிக்கையில் SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக ஆர் அபேசிங்க மற்றும் SSC தலைவர் ஐ.எஸ். டி சில்வா ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். இந்நிகழ்வில் SLT மற்றும் SSC ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக ஆர் அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “இரு முன்னணி நிறுவனங்களின் பரஸ்பர அனுகூலம் நிறைந்த வியாபார உறவின் ஆரம்பமாக இது அமைந்திருப்பதுடன், SSC இல் சகல செயற்பாடுகளிலும் டிஜிட்டல் தீர்வுகளை அறிமுகம் செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம்.” என்றார்.

SLT-MOBITEL ஃபைபர் சேவைகளினூடாக, SSC அங்கத்தவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் சிறந்த இணைப்புத்திறன் மற்றும் அதியுயர் இணைய வேகங்கள் போன்றன வழங்கப்படும்.

SSC கழகத்தின் தலைவர் ஐ.எஸ்.டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “எமது தொடர்பாடல் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக, SLT-MOBITEL போன்ற தொலைத்தொடர்பாடல் ஜாம்பவானுடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்வதுடன், மகிழ்ச்சியடைகின்றோம். எமது அங்கத்தவர்களுக்கு SLT-MOBITEL இன் உயர் தொழில்நுட்பங்களினூடாக சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம்.” என்றார்.

SLT-MOBITEL இன் ஃபைபர் இணைப்புகளை துரித கதியில் பெற்றுக் கொடுப்பது மற்றும் 2 மில்லியனுக்கும் அதிகமான இல்லங்களுக்கு ஃபைபர் புரோட்பான்ட் தொழில்நுட்பத்தை வழங்குவது ஆகியவற்றின் பிரகாரம் இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.

1899 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சிங்கள விளையாட்டுக் கழகம் (SSC), 120 வருடங்களுக்கு மேலாக இயங்குவதுடன், நாட்டிலுள்ள மிகவும் பெருமைக்குரிய விளையாட்டுக் கழகங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. கொழும்பின், கறுவாத் தோட்டப்பகுதியில் அமைந்துள்ளதுடன், 6000 க்கு அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. சர்வதேச கிரிக்கட் கழகங்களுடன் பரஸ்பர அங்கத்துவங்களையும் பேணி வருகின்றது.

# சுவிஸ் அரசாங்கத்துடன் பவர் கைகோர்ப்பு




இலங்கையில் விருந்தோம்பல் கல்வித் துறையை மேம்படுத்தும் நோக்கில், ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின், சுவிஸ் ஹொஸ்பிட்டாலிட்டி அன்ட் மனேஜ்மன்ட் அகடமி (SHMA), அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் (SDC) அமைப்புடன் அண்மையில் அரச மற்றும் தனியார் துறை பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. பவர் நிறுவனம் பரந்தளவு வியாபார ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.

உத்தியோகபூர்வ உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், பவர் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரெல்ஃவ் ப்லாசர் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிஸ் தூதுவர் கலாநிதி. டி. ஃபர்க்லர் ஆகியோர் உடன்படிக்கையை பரிமாறிக் கொண்டனர்.

தொற்றுப் பரவல் உச்ச கட்டத்தில் காணப்பட்ட காலப்பகுதியில் நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், பவர் மற்றும் SDC இன் பெருமளவு பங்கேற்பை பதிவு செய்திருந்தது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகள் ஸ்தம்பித்திருந்த கால கட்டத்தில், திறன் படைத்தவர்களின் புலம்பெயர்வுடன், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த RIESCO நிகழ்ச்சி தொடர்பில் ரொல்ஃவ் ப்லாசர் அறிந்து கொண்டதுடன், அதிகரித்துச் செல்லும் திறன் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான உடனடியானதும் பிரயோக ரீதியானதுமான தீர்வாக இனங்கண்டிருந்தார்.

கடந்த ஆண்டில், பவர் நிறுவனத்தின் அதிகாரிகள், சுவிஸ் தூதுவருடன் சந்திப்பை முன்னெடுத்ததுடன், கல்விசார் நிலைப்பாட்டில் SHMA மற்றும் பல்வேறு தீர்வுகளை அறிமுகம் செய்திருந்தனர். இந்த ஆண்டின் முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த மேலதிக கலந்துரையாடல்களின் பிரகாரம், SDC உடன் கைகோர்த்து செயலாற்றுவதை பவர் பரிந்துரைத்திருந்ததுடன், அதனூடாக நாட்டினுள் RIESCO நிகழ்ச்சியை முன்னெடுக்கத் தீர்மானித்தது.

உலகின் சிறந்த மட்டத்தில் காணப்படும் விருந்தோம்பல் கல்வியில் சுவிட்சர்லாந்தின் நற்பெயர் மற்றும் தர நியமங்களை இலங்கையில் உள்வாங்கி, நாட்டின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு அவசியமான தீர்வாக முன்மொழிந்திருந்ததுடன், ஆயிரக் கணக்கான வாழ்வாதாரங்கள் இந்தத் துறைகளில் தங்கியிருக்கும் நிலையில், பல்வேறு சவால்களுக்கு மத்தியில், அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடிவதுடன், பொருளாதாரத்திலும் பெருமளவு பங்களிப்பை வழங்கக்கூடியதாக அமைந்திருக்கும். அதனூடாக, கிராமிய மட்டங்களைச் சேர்ந்த திறன்படைத்த இளைஞர்கள் மத்தியில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிபுணர்கள் தோற்றுவிக்கப்படுவதை உறுதி செய்கின்றது. தொழிற்துறையில் காணப்படும் திறன் இடைவெளியைக் குறைத்துக் கொள்ள இந்தத் திட்டம் பங்களிப்பு வழங்கும் என்பதுடன், அரசாங்கத்தின் மீது காணப்படும் சுமையைத் தணிப்பதாகவும், நாட்டை மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

Hotel & Gastro Formation இனால் வடிவமைக்கப்பட்ட RIESCO நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, அரச நலன்புரிக் கட்டமைப்பில் பெருமளவில் தங்கியிருக்கும் வகையில், சுவிட்சர்லாந்துக்கு புலம்பெயர்வோரை இலக்கு வைக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் உள்ளம்சம் மற்றும் பொருளடக்கங்கள் போன்றவற்றினூடாக, குறுகிய காலப்பகுதியில் இந்தக் கற்கையை பூர்த்தி செய்வதுடன், தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவு அவசியமான திறன்களைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்து, விருந்தோம்பல் துறையில் பங்களிப்பு வழங்குவோராக மாற்றி பொருளாதாரத்திலும் பங்களிப்புச் செய்யச் செய்கின்றது.

அரச மற்றும் தனியார் துறைகளுடன் பணியாற்றி, மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் கட்டமைப்பினூடாக இந்தத் திட்டத்தை நிலைபேறானதாகப் பேண SHMA திட்டமிட்டுள்ளது. SSG திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவதனூடாக, இலங்கையில் ஏற்கனவே காணப்படும் நீண்ட மற்றும் பாரம்பரிய விருந்தோம்பல் கற்கைகளுக்கு பதிலாக நாட்டிலுள்ள பயிலுநர்களுக்கு பெருமளவு அனுகூலங்கள் கிடைக்கும்.

விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் சுவிஸ் தொழிற்துறை திறன்கள் விருத்தி (VSD) பாடவிதானத்துக்கமைய, இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதை SHMA உறுதி செய்வதுடன், உள்நாட்டு பாடவிதானங்களை மேம்படுத்தும் வகையில் நாடு முழுவதிலும் பல்வேறு பயிலல் நிலையங்களை நிறுவும். பயிற்றுவிப்பாளரை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகளினூடாக, SHMA இனால் அர்த்தமுள்ள பயிற்றுவிப்பு வழிமுறைகளை மேலும் உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

SSG நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சுமார் 2240 திறன் படைத்தவர்களை மூன்றாண்டு காலப்பகுதியில் தயார்ப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

# மீண்டும் தலை தூக்கும் கொரோனா



இந்தியாவில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் வெகுவாக அதிகரித்து வரும் நிலையில் இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பிரதமர் மோடி நேற்றைய தினம்(22) அவசர ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் சீனாவில் தற்போது புதிதாக உருவெடுத்துள்ள ஒமைக்ரோனின் பிஎப்.7 துணை வைரஸ்களே தற்போது இந்தியாவிலும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வைரஸானது இந்தியா சீனா மாத்திரமன்றி அமெரிக்கா, பிரித்தானியா, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளிலும் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படடுள்ளது.

குஜராத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் இருவருக்கு இவ் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்தே குஜராத் உயிர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் இதனைக் கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இது வரை 4 பேருக்கு ஒமைக்ரோன் பிஎப்.7 வைரஸ் தொற்று இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர்



# 9 பேரின் உயிரைப் பறித்த பாடசாலை பஸ்

மணிப்பூர் மாநிலத்தில், மகளிர் பாடசாலை பஸ்ஸொன்று நேற்று முன்தினம் (21) பள்ளமொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 5 மாணவிகள் உட்பட 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கல்விச் சுற்றுலா சென்ற பஸ்ஸே இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 5 மாணவிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 4 பேர் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 20 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 ஆண்டுகளில் தீர்க்கப்படும் - அமித்ஷா உறுதி



நாட்டில் போதைப் பொருள் கடத்தல் பிரச்சனை இன்னும் 2 ஆண்டுகளில் முற்று முழுதாகத் தீர்க்கப்படும் என இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை குறித்து மக்களவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”போதைப் பொருட்களால் கிடைக்கும் பணம் எமது நாட்டின் பொருளாதாரத்தைப் பலவீனமாக்குகின்றது.

எனவே எல்லைகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் வழியாக போதைப்பொருட்கள் இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சிகள் அரசினால் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் அண்மைக்காலமாக போதைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் இனங் காணப்பட்டு சீல் வைக்கப்பட்டு வருவதோடு அதனுடன் தொடர்புடையவர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்” எனத் தெரிவித்துள்ளார்.

புது டெல்லி

# பணவீக்கம் குறித்து மனம் திறந்தார் நிர்மலா



”பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக” நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்றுமுன்தினம்(21) இடம்பெற்ற விவாதமொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”உரம் மற்றும் எரிபொருள் விலை போன்ற வெளியுலக காரணங்களால், பணவீக்கம் அதிகரிக்கிறது.

இருப்பினும், மொத்தவிலை பணவீக்கம் கடந்த 21 மாதங்களில் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளது.

6 % க்கும் மேல் இருந்த சில்லரை விலை பணவீக்கம், கடந்த நவம்பர் மாதத்தில் 5.88 சதவீதமாக குறைந்துள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை போன்ற கொள்கைகளால், தனியார் மூலதன செலவு அதிகரித்து வருகின்றது. வரிவசூலில் ஏற்பட்ட முன்னேற்றத்தால், துணை மானிய கோரிக்கையில் கோரப்பட்ட தொகையை திரட்ட முடியும். வங்கிகளின் மொத்த வாராக்கடன்கள், 6 ஆண்டுகளில் இல்லாத அளவாக 5.9 சதவீதமாக குறைந்துள்ளது.

கொரோனாவை எதிர்கொண்ட மத்திய அரசின் அணுகுமுறையால், பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 37 லட்சம் கணக்குகள் முடக்கம்



நவம்பர் மாதத்தில் மாத்திரம் 37 லட்சம் பயனாளர்களின் கணக்குகள் நீக்கம் செய்யட்டதாக வட்ஸ்அப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள புதிய தகவல் தொழில்நுட்ப விதியின்படி, 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள், புகார் மற்றும் அதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 45 நாட்களுக்கு ஒருமுறை அறிக்கை வெளியிட வேண்டும்.

அதன்படி, வட்ஸ்-அப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நவம்பர் 1ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலான காலத்தில் விதிகளை மீறியதாக 37 லட்சம் இந்தியர்களின் வட்ஸ்-அப் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்



# மனைவி கொலை; கணவர் விடுதலை

மனைவிக்கு விஷம் கொடுத்து கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நபரை விடுதலை செய்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாமக்கல்லைச் சேர்ந்த ஜெயபால் என்ற குறித்த நபர், ‘ தனது மனைவியைக் கொலை செய்தா‘ எனத் தீர்ப்பளிக்கப்பட்டு மாவட்ட விரைவு நீதிமன்றம் கடந்த 2018 ஆம் ஆண்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இதனை எதிர்த்து, அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம்” பிரேத பரிசோதனை அறிக்கையில் மனைவியின் வயிற்றில் விஷம் இருந்ததாக கூறப்படவில்லை எனக் கூறி தண்டனையை இரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

# பெண்ணுடன் ஆபாச உரையாடல்

## சர்ச்சையில் சிக்கிய இம்ரான்கான்

பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பதவியை இழந்த முன்னாள் பிரதமர் இம்ரான்கான், தற்போதைய பிரதமர் ஷபாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

அதேசமயம் நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் அண்மையில் 'இம்ரான்கான் பெண் ஒருவருடன் தொலைபேசியில் ஆபாசமாக உரையாடுவது போன்ற ஒடியோவொன்றை பத்திரிகையாளர் ஒருவர் யூடியூப்பில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.



மேலும் குறித்த ஒடியோவானது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் இதுதொடர்பாக அரசியல் கட்சியினர் பலரும் இம்ரான்காணை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

எனினும் இம்ரான்கானின் நற்பெயரை கெடுப்பதற்காகவே அவரது அரசியல் எதிரிகள் இவ்வாறு போலியான ஒடியோவொன்றை வெளியிட்டுள்ளதாக அவரின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

சீனா

# சீனாவைப் பந்தாடும் கொரோனா

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது வெகுவாக அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக அந்நாட்டில் ஒமைக்ரோனின் `BF.7` துணை வைரஸ்களின் பரவலானது நாளுக்கு நாள் தீவிரமடைந்துகொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சீனாவின் பல பகுதிகளிலும் கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் "சீனாவின் நிலையானது மிகவும் கவலை அளிப்பதாகவும், சீனாவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும்", உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அதே சமயம் 'கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்துவதில் கவனம் செலுத்துமாறும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கெப்ரயஸ்', சீனாவை வலியுறுத்தியுள்ளார்.


அதுமட்டுமல்லாது கொரோனா பாதிப்பு குறித்த விவரங்களை பகிர்ந்து ஆய்வுகள் செய்ய, சீனாவைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஆர்ஜென்டினா

# கட்டுக்கடங்காத ரசிகர்கள் கூட்டத்தால் வெடித்த மோதல்





காற்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்பிற்கு மத்தியில் 'FIFA 2022' உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமாகி கடந்த 18ஆம் திகதி நிறைவடைந்தது.

அந்த வகையில் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் மப்பேயின் பிரான்ஸ் அணியை வீழ்த்தி, பிரபல காற்பந்து வீரரான மெஸ்ஸியின் ஆர்ஜென்டினா அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இப்போட்டியை உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான ரசிகர்கள் நேரில் சென்றும், தொலைக்காட்சியிலும்,சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பார்வையிட்டனர்.

இந்நிலையில் ஆர்ஜென்டினா காற்பந்து சங்கத்தினர் வெற்றிபெற்ற வீரர்களை பியூனஸ் அயர்சில், சுமார் 30 கிலோமீற்றர் தொலைவிற்கு திறந்த பஸ்ஸில் கோப்பையுடன் ஊர்வலம் அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தனர்.

இதனையடுத்து நாடு திரும்பிய வீரர்களை வரவேற்க, அதிகாலை முதலே லட்சக்கணக்கான ஆர்ஜென்டினா ரசிகர்கள் அப்பகுதியில் அணிவகுத்து நின்றனர்.


ரசிகர்களின் கூட்டத்தில் பஸ் ஊர்ந்து சென்ற நிலையில், கட்டுக்கடங்காத கூட்டத்தால் பஸ் ஊர்வலம் கைவிடப்பட்டது.

எனினும் அணிவகுப்பு நடத்த திட்டமிட்ட பாதையில் ஹெலிகொப்டரில் வீரர்கள் வலம் வந்தனர்.

இந்நிலையில் பஸ்ஊர்வலம் கைவிடப்பட்டதற்கு பொலிஸாரே காரணம் என அர்ஜென்டினா கால்பந்து சங்கம் குற்றம்சாட்டிய நிலையில், ரசிகர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

# தனக்குத்தானே கொரோனாவை வரவழைத்த பாடகி



சீனாவில் உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் பரவலானது நாளுக்கு நாள் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இதனால் சீன அரசு, நாட்டில் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல் படுத்தி வருகின்றது.


இந்நிலையில் 'ஜேன் ஜாங் லியாங்யின் (Jane Zhang Liangyin) என்ற பிரபல பாடகியொருவர் தனக்குதானே கொரோனா வைரஸ் தொற்றை வரவழைத்து கொண்டதாக அறிவித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்திள்ளது.

38 வயதான இவரை சமூக வலைத்தளத்தில் 43 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பின்தொடர்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சமீபத்தில் அவர் தனது சமூக வலைப்பக்கத்தில் கொரோனாவிற்கு தயாராகி வருவதாகத் தெரிவித்திருந்தார்.

அதன்பின் மறுநாள் தனக்கு அனைத்து அறிகுறிகளும் மறைந்து விட்டதாக குறிப்பிட்டிருந்தார்.





எஸ்டோனியா

# நேட்டோ படையினருடன் உணவருந்திய ரிஷி

எஸ்டோனியாவில் உள்ள தாபா இராணுவ தளத்தில், நேட்டோ படையினருக்கு அண்மையில் சிறப்பு கிறிஸ்மஸ் விருந்து அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரித்தானிய பிரதமர் 'ரிஷி சுனக்' நேட்டோ படையினருடன் சேர்ந்து உணவருந்தினார்.

இதன்போது உக்ரேன்-ரஷ்யப் போரில் நேட்டோ படை வீரர்கள் ஆற்றிவரும் சேவைக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.



எல்.பி.எல்:

# வெளியேற்றப்பட்ட காலி கிளாடியேட்டர்ஸ்

லங்கா பிரீமியர் லீக்கிலிருந்து (எல்.பி.எல்) காலி கிளாடியேட்டர்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்டார்ஸுடனான வெளியேற்றப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து கிளாடியேட்டர்ஸ் வெளியேற்றப்பட்டது.

மழை காரணமாக அணிக்கு 18 ஓவர்கள் கொண்டதாக நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், கசுன் ராஜித (2), மொஹமட் நபி (2), டொமினிக் ட்ரேக்ஸ், சுரங்க லாக்மால், பெனி ஹெவெலிடம் (3) விக்கெட்டுகளை வரிசையாகப் பறிகொடுத்து 18 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், சஹான் ஆராச்சிகே 53 (31) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், ரவி பொப்பாராவின் ஆட்டமிழக்காத 43 (28) ஓட்டங்களோடு 16.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், இமாட் வஸீம் 4-0-18-1, நுவான் பிரதீப் 3-0-21-1, லக்‌ஷன் சந்தகான் 3-0-18-0, வஹாப் றியாஸ் 3.5-0-26-0, நுவான் துஷார 3-0-23-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக பொப்பாரா தெரிவானார்.

இந்நிலையில், முன்னதாக நடைபெற்ற கண்டி பல்கொன்ஸுடனான முதலாவது தகுதிகாண் போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 24 ஓட்டங்களால் வென்ற நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கண்டி பல்கொன்ஸ்

கண்டி பல்கொன்ஸ்: 143/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 35 (31), கமிந்து மென்டிஸ் 26 (21), நஜிபுல்லாஹ் ஸட்ரான் 22 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: விஜயகாந்த் வியாஸ்காந்த் 3/30 [4], மகேஷ் தீக்‌ஷன 2/24 [4], பினுர பெர்ணாண்டோ 1/23 [4], ஸமன் கான் 1/31 [4], திஸர பெரேரா 1/17 [2], ஷொய்ப் மலிக் 0/14 [2])

ஜஃப்னா கிங்ஸ்: 98/3 (11 ஓவ. ) (வெ.இ 75 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: அவிஷ்க பெர்ணாண்டோ 21 (11), டுனித் வெல்லலாகே ஆ.இ 19 (23), சதீர சமரவிக்கிரம ஆ.இ 15 (15), அஃபிஃப் ஹொஸைன் 14 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாமிக கருணாரத்ன 1/15 [2.4], வனிடு ஹஸரங்க 0/8 [2])

போட்டியின் நாயகன்: விஜயகாந்த் வியாஸ்காந்த்



### நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான

# பாகிஸ்தான் குழாமில் ஹஸன் அலி


நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில், வேகப்பந்துவீச்சாளர் ஹஸன் அலி மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, புதுமக வீரரான கம்ரான் குலாமும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், இங்கிலாந்துக்கெதிரான தொடரில் பங்கேற்ற மொஹமட் அலி, பாஹீம் அஷ்ரப் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: பாபர் அஸாம், அப்துலாஹ் ஷஃபிக், அப்ரார் அஹ்மட், ஹஸன் அலி, இமாம்-உல்-ஹக், கம்ரான் குலாம், மொஹமட் நவாஸ், மொஹமட் றிஸ்வான், மொஹமட் வாஸிம் ஜூனியர், நசீம் ஷா, நௌமன் அலி, சஃப்ராஸ் அஹ்மட், அலி அகா சல்மான், சௌட் ஷகீல், ஷண் மசூட், ஸஹிட் மஹ்மூட்.

# செவில்லாவை விட்டு வெளியேறிய இஸ்கோ



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான செவில்லாவானது, தமது மத்தியகள வீரரான இஸ்கோ கழகத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அறிவித்துள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையுள்ள ஒப்பந்தத்தை ஐந்து மாதங்களுக்குள் இரத்துச் செய்ய 30 வயதான இஸ்கோவும், செவில்லாவும் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் ஜோர்ஜ் சமபோலி தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட பிறகு இஸ்கோவின் விளையாடும் நேரமானது சடுதியாகக் குறைவடைந்திருந்தது.

# விளையாட்டுச் சட்ட திருத்தங்களுக்கு சங்கங்கள் எதிர்ப்பு

விளையாட்டுச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பல திருத்தங்களுக்கு 50க்கும் மேற்பட்ட விளையாட்டுச் சங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. விளையாட்டுத்துறை அமைச்சரின் சர்வாதிகார உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்போவதாக அவை தெரிவித்துள்ளன.

இந்நாட்டின் விளையாட்டுத்துறையை படு குழியில் தள்ள முயற்சிக்கும் பலரது விருப்பத்திற்கேற்ப இந்த விளையாட்டுச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்கங்கள் குறிப்பிடுகின்றன.

அதன்படி எதிர்காலத்தில் கிரிக்கெட், றக்பி, கால்பந்தாட்டம், கராத்தே, தேசிய ஒலிம்பிக் செயற்குழு, டென்னிஸ் மற்றும் பல விளையாட்டு சங்கங்கள் இந்த திருத்தங்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடிவு செய்துள்ளன.

# பரிஸ் ஸா ஜேர்மனில் நீடிக்கவுள்ள மெஸ்ஸி



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜேர்மனில் குறைந்தது மேலுமொரு பருவகாலத்துக்காவது நீடிப்பதற்கு கழகத்துடன் வாய்மொழி மூலமாக அக்கழகத்தின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜேர்மைனுடனான 35 வயதான மெஸ்ஸியின் ஒப்பந்தமானது அடுத்தாண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைகின்ற நிலையிலேயே, எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரையில் மெஸ்ஸியை கழகத்தில் வைத்திருப்பதுக்குரிய ஓராண்டு நீடிப்பை செயற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 22 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.